©
GOVERNMENT OF TAMIL NADU
2018

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 5.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 18] CHENNAI, WEDNESDAY, MAY 2, 2018
Chithirai 19, Vilambi, Thiruvalluvar Aandu–2049

## Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

*Pages.*

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – திருவண்ணாமலை மாவட்டம் – செங்கம், கலசப்பாக்கம் மற்றும் போளூர் வட்டங்களை சீரமைத்து கோவிலூர் மதுரா ஜமுனாமரத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஜமுனாமரத்தூர் வட்டம் உருவாக்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது .. .. .. .. .. 24-35

## NOTIFICATIONS BY GOVERNMENT

### வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

*தலைமைச் செயலகம், 2018 மே 2.*

No. II(1)/REV/9/2018.

[வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – திருவண்ணாமலை மாவட்டம் – செங்கம், கலசப்பாக்கம் மற்றும் போளூர் வட்டங்களை சீரமைத்து கோவிலூர் மதுரா ஜமுனாமரத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஜமுனாமரத்தூர் வட்டம் உருவாக்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.]

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:–

*[அரசாணை (நிலை) எண்.127, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி.1(1) பிரிவு, 6 ஏப்ரல் 2018, பங்குனி 23, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

**படிக்கவும்:–**

1. அரசாணை (நிலை) எண்.279, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 9–6–2003.
2. முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கடித எண். பணி 6(3)/34293/2016, நாள் 24–8–2017 மற்றும் 20–9–2017.

********

**ஆணை: எண்.127, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி.1(1) பிரிவு, 2018 ஏப்ரல் 6.**

29–07–2017 அன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

''**திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர், செங்கம், கலசப்பாக்கம் வட்டங்களில் உள்ள மலைகிராமங்களை உள்ளடக்கி ஜமுனாமரத்தூர் என்ற புதிய வட்டம் உருவாக்கப்படும்.**''

2. பார்வை 2–இல் படிக்கப்பட்ட முதன்மைச் செயலர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில் செங்கம் வட்டத்திலிருந்து 14 வருவாய் கிராமங்கள், கலசப்பாக்கம் வட்டத்திலிருந்து 3 வருவாய் கிராமங்கள் மற்றும் போளூர் வட்டத்திலிருந்து 17 வருவாய் கிராமங்கள் ஆகிய கிராமங்களை பிரித்து சீரமைத்து, கோவிலூர் மதுரா ஜமுனாமரத்தூர் கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு 34 வருவாய் கிராமங்களுடன் புதிய வட்டம் உருவாக்கலாம் எனவும், புதிதாக உருவாக்கப்படவுள்ள ஜமுனாமரத்தூர் வட்டத்தில் உள்ளவை மலை கிராமங்கள் என்பதாலும், கிராமங்களுக்கு இடையேயான தொலைவு மிக அதிகமாக உள்ளதாலும், பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோல்களை செயல்படுத்த தேவையில்லை என்றும், புதிதாக உருவாக்கப்படும் ஜமுனாமரத்தூர் வட்டம் புலியூர் மற்றும் நம்மியம்பட்டு ஆகிய இரண்டு குறுவட்டங்கள் மற்றும் ஒரு மண்டலத்தையும் உள்ளடக்கி கீழ்க்கண்டவாறு ஆட்சி எல்லையை பெற்றிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்:–

**ஜமுனாமரத்தூர் வட்ட ஆட்சி எல்லை பட்டியல்**

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விளக்கங்கள்* | *தற்போதைய வட்டங்கள்* | | | *உத்தேசிக் கப்பட்டுள்ள வட்டம்* | *சீரமைப்பிற்குப்பின் எஞ்சிய வட்டங்கள்* | | | *அரசாணை (நிலை) எண்.279, வ.து. நாள் 9–6–2003– இல் குறிப்பிட் டுள்ள அளவு கோல்கள்* |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* | *(8)* | *(9)* | *(10)* |
| 1 | தலைமையிடம் | போளூர் | செங்கம் | கலசப் பாக்கம் | ஜமுனா–மரத்தூர் | போளூர் | செங்கம் | கலசப்–பாக்கம் | |
| 2. | பரப்பளவு (ச.கி.மீ) | 646.20 | 569.33 | 258.80 | 125.87 | 599.71 | 530.96 | 217.79 | குறைந்தளவு 250 சகிமீ – அதிகளவு 2000 சகிமீ |
| 3. | மக்கள் தொகை | 251655 | 280581 | 140301 | 47349 | 227161 | 270461 | 127566 | குறைந்தளவு 1,00,000 – அதிகளவு 5,50,000 |

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விளக்கங்கள்* | *தற்போதைய வட்டங்கள்* | | | *உத்தேசிக் கப்பட்டுள்ள வட்டம்* | *சீரமைப்பிற்குப்பின் எஞ்சிய வட்டங்கள்* | | | *அரசாணை (நிலை) எண்.279, வ.து. நாள் **9–6–2003–** இல் குறிப்பிட் டுள்ள அளவு கோல்கள்* |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* | *(8)* | *(9)* | *(10)* |
| 4. | வருவாய் கோட்டத்தின் பெயர் | | | | திருவண்ணாமலை | | | | |
| 5. | சட்டமன்ற தொகுதியின் பெயர் | போளூர் (பகுதி கலசப்பாக்கம்) | செங்கம் (பகுதி தண்டராம் பட்டு) | கலசப்– பாக்கம் (பகுதி செங்கம்) | பகுதி கலசப்– பாக்கம் மற்றும் செங்கம் | போளூர் (பகுதி கலசப்– பாக்கம்) | செங்கம் (பகுதி தண்டராம் பட்டு) | கலசப் பாக்கம் (பகுதி செங்கம்) | |
| 6. | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | ஆரணி (பகுதி திருவண்ணா மலை) | திருவண்– ணா மலை | திருவண்– ணாமலை | திருவண்– ணாமலை | ஆரணி (பகுதி திருவண்– ணாமலை) | திருவண்– ணாமலை | திருவண்– ணாமலை | |
| 7. | நகராட்சிகளின் எண்ணிக்கை | – | – | – | – | – | – | – | – |
| 8. | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | 1.போளூர் 2.சேத்துப்– பட்டு (பகுதி) 3. ஜமுனா மரத்தூர் (பகுதி) | 1.செங்கம் 2.புதுப் பாளையம் 3 ஜமுனா மரத்தூர் (பகுதி) | 1.கலசப்– பாக்கம் 2.ஜமுனா மரத்தூர் (பகுதி) | ஜமுனா– மரத்தூர் | 1.போளூர் 2.சேத்துப்– பட்டு (பகுதி) | 1.செங்கம் 2.புதுப் பாளையம் 3. ஜமுனா மரத்தூர் (பகுதி) | கலசப் பாக்கம் | 2 அல்லது 3.ஊராட்சி ஒன்றிய– ங்கள் |
| 9. | சிறப்பு பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை | 1 | 1 | – | – | 1 | 1 | – | – |
| 10. | உள்வட்டங்களின் எண்ணிக்கை | 5 | 5 | 3 | 2 | 5 | 5 | 3 | – |
| 11. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 114 | 121 | 54 | 34 | 97 | 107 | 51 | குறைந்த அளவு 30 கிராமங்கள் |
| 12. | கிராம பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை | 70 | 87 | 49 | 9 | 66 | 83 | 48 | – |
| 13. | தலைமையிடத்தில் இருந்து வெகு தொலைவில் உள்ள கிராமத்தின் தூரம் | புளியங் குப்பம் 80 கி.மீ | பலா மரத்துர் 33 கி.மீ | கீழ தட்டியாப் பட்டு 80 கி.மீ | நீப்பளாம் பட்டு (வடக்கு 40 கி.மீ) கல்லாத்தூர் (தெற்கு 45 கி.மீ) செண்பகத் தோப்பு (கிழக்கு 75 கி.மீ) | கல்பட்டு 25 கி.மீ | பண்டி ரெவ் 27 கி.மீ | மேல் சோழங் குப்பம் 30 கி.மீ | – |

தற்போது செங்கம் வட்டம் 5 குறுவட்டங்கள் மற்றும் 121 கிராமங்களை உள்ளடக்கியும், கலசப்பாக்கம் வட்டம் 3 குறுவட்டங்கள் மற்றும் 54 கிராமங்களை உள்ளடக்கியும், போளூர் வட்டம் 5 குறுவட்டங்கள் மற்றும் 114 கிராமங்களை உள்ளடக்கியும் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க மேற்படி வட்டங்களை சீரமைத்து கோவிலூர் மதுரா ஜமுனாமரத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஜமுனாமரத்தூர் வட்டம் அமைப்பதன் மூலம் மேற்படி வட்டங்கள் மற்றும் குறுவட்டங்கள் மற்றும் கிராமங்கள் அவற்றின் ஆட்சி எல்லைகளாக அமையும்.

3. மேலும், புதியதாக உருவாக்கப்படவுள்ள ஜமுனாமரத்தூர் வட்டத்திற்கு பொதுப்பிரிவிற்கு 15 பணியிடங்களும், சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு 6 பணியிடங்களும், தேர்தல் பிரிவிற்கு 2 பணியிடங்களும், வட்ட வழங்கல் பிரிவிற்கு 5 பணியிடங்களும் நில அளவை

பிரிவிற்கு 6 பணியிடங்களும் புதியதாக 6 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களும் என ஆக மொத்தம் 40 பணியிடங்கள் உருவாக்கிட ஒப்பளிப்பும், புதியதாக தோற்றுவிக்கப்படவுள்ள ஜமுனாமரத்தூர் வட்டத்திற்கு ஓராண்டிற்கான தொடரும் செலவினமாக ரூ. 59,02,716/—ம் தொடராச் செலவினமாக ரூ. 19,02,446/—ம் ஒப்பளிப்பும் வழங்கிடுமாறு முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:—

(i) திருவண்ணாமலை மாவட்டத்தில், செங்கம், கலசப்பாக்கம் மற்றும் போளூர் வட்டங்களை சீரமைத்து கோவிலூர் மதுரா ஜமுனாமரத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஜமுனாமரத்தூர் வருவாய் வட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) புதியதாக உருவாக்கப்பட்டுள்ள ஜமுனாமரத்தூர் வட்டத்திற்கு இணைப்பு—2 கலம்—13—இல் உள்ளபடி 47 பணியிடங்கள் மறுபரவலமர்த்தல் மூலமும், 33 பணியிடங்கள் (இணைப்பு 1—இல் உள்ளபடி) புதியதாக உருவாக்குவதன் மூலமும் தோற்றுவிக்கப்படுகிறது. (புதியதாக உருவாக்கப்பட்ட 33 பணியிடங்களில் பொதுவான பணியாளர் மாதிரியில் (Generalized Staff Pattern) வரையறுக்கப்படாத 6 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களும் அடங்கும்).

(iii) புதியதாக உருவாக்கப்பட்டுள்ள ஜமுனாமரத்தூர் வட்டத்திற்கான ஒரு வருடத்திற்கான தொடரும் செலவினமாக ரூ.1,43,33,016/—ம் (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தி மூன்று இலட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து பதினாறு மட்டும்) மற்றும் தொடராச் செலவினமாக ரூ. 19,02,446/—ம் (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து இரண்டாயிரத்து நானூற்றி நாற்பத்தாறு மட்டும்) கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது:—

**தொடரும் செலவினம்**

| *வ. எண்* (1) | *விவரம்* (2) | *தொகை (ரூபாய்)* (3) |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் தோராயமாக (ஆண்டொன்றுக்கு) | 1,39,95,516 |
| 2 | அலுவலக கட்டட வாடகை | பொதுப்பணித்துறை பரிந்துரையின் பேரில் நிர்ணயம் செய்யப்படும் |
| 3 | மின்சாரக் கட்டணம் | 1,20,000 |
| 4 | எரிபொருள் (டீசல்) வாகனங்கள் – 2 | 1,92,000 |
| 5 | தொலைபேசிக் கட்டணம் | 25,500 |
| | **மொத்தம்** | **1,43,33,016** |

**தொடராச் செலவினங்கள்**

| *வ. எண்* (1) | *விவரம்* (2) | *எண்ணிக்கை* (3) | *தொகை (ரூபாய்)* (4) |
|---|---|---|---|
| 1 | தளவாடங்கள் | | 4,00,000 |
| 2 | ஈப்பு | 2 (ஒன்றுக்கு ரூ.6,30,723/— லட்சம் வீதம்) | 12,61,446 |
| 3 | தொலைபேசி இணைப்பு | 2 | 6,000 |
| 4 | கணினி | 3 | 75,000 |
| 5 | பிரிண்டர் (அச்சு பதிப்பு இயந்திரம்) | 3 | 25,000 |
| 6 | ஜெராக்ஸ் (நகல் இயந்திரம்) | 1 | 65,000 |
| 7 | பேக்ஸ் (தொலையச்சு) | 1 | 10,000 |
| 8 | குளிர்சாதனம் | 2 | 50,000 |
| 9 | தீயணைப்பான் | 2 | 10,000 |
| | **மொத்தம்** | | **19,02,446** |

*(iv)* குரூப் கிராமங்களை பிரித்து புதியதாக குரூப் கிராமங்களை உருவாக்குதல் தொடர்பாக நடைமுறையில் உள்ள விதிமுறைகள், சட்டம் மற்றும் அரசாணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

*(v)* இரவுக் காவலர், மசால்சி, புல உதவியாளர் போன்ற பணியிடங்கள் அரசு ஆணை (நிலை) எண்.49, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 14–5–2002–இன்படி வெளிமுகமை (outsourcing) மூலமாக ஒப்பந்த (contract) அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்.

*(vi)* அலுவலக உதவியாளர் பணியிடங்கள் தமிழ்நாடு அடிப்படைப்பணிக்கான சிறப்பு விதிகளில், விதி–4(a) (நியமனம்)–ஐயும், அரசாணை (நிலை) எண்.44, தொ(ம)வே.வா.துறை, நாள் 11–03–2015–ஐயும் உடனிகழ்வாக பின்பற்றப்படுவதுடன், நடைமுறையில் உள்ள உரிய விதிகள்/ சட்டம்/ அரசாணைகளை பின்பற்றி நிரப்பப்பட வேண்டும்.

*(vii)* ஈப்பு ஓட்டுநர் பணியிடங்கள் 'TEXCO' நிறுவனப் பரிந்துரையின் பேரில் நிரப்பப்பட வேண்டும்.

*(viii)* மறுபரவலமர்த்தல் மூலம் ஜமுனாமரத்தூர் வருவாய் வட்டத்திற்கு இதர வருவாய் வட்டங்களிலிருந்து மாற்றப்பட வேண்டிய பணியிடங்கள் அப்பணியிடங்களுக்குரிய தளவாடங்களுடன் ஜமுனாமரத்தூர் வருவாய் வட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

*(ix)* இது ஒரு ''புதுத்துணைப்பணி'' குறித்த செலவினமாகும் என்பதால் புதுதுணைப்பணி தொடர்பான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

*(x)* ஏற்கனவே உள்ள வட்டங்களில், வட்டப் பிரிவினைக்குப்பின் உள்ள பணியிடங்கள் பொதுவான பணியாளர் மாதிரியில் (Generalized Staff Pattern) வரையறுத்துள்ளவற்றிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

*(xi)* அவ்வாறு மிகைப்பணியிடமாக கண்டறியப்பட்ட பணியிடங்கள் அரசுக்கு சரண் செய்யப்பட வேண்டும் அல்லது தேவைப்படும் இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும். இல்லையெனில், புதிய வருவாய் வட்டம் துவக்கப்பட்டவுடன் அப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக வைக்கப்பட வேண்டும்.

*(xii)* மேலே (xi)–இல் குறிப்பிட்டுள்ளவாறு பணியிடங்களை சரண் செய்யவோ அல்லது தேவைப்படும் இடங்களுக்கு மாற்றம் செய்யவோ முடியாத நிலையில் மிகைப்பணியிடங்களாகக் கண்டறியப்பட்ட பணியிடங்களில் பணிபுரிபவர்களை அவர்கள் பணி ஓய்வு பெறும் வரையிலோ அல்லது அப்பணியிடங்கள் காலியாகும் வரையிலோ அனுமதித்து, அதன் பின்னர் நிரப்பப்படாமல் காலியாக வைக்க வேண்டும்.

**5.** மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

(I) **பணியாளர் சம்பளங்கள்**

(i) **வருவாய் பணியிடங்கள்**

"**2053–00** மாவட்ட நிருவாகம் **– 094** ஏனைய பணியாளரமைப்பு **–** மாநிலச் செலவினங்கள் **–**AB வட்டப் பணியாளரமைப்புகள் **– 01** சம்பளங்கள்
(கு.தொ.கு **2053 00 094** AB 0102)"

(ii) "**2053–00** மாவட்ட நிருவாகம் **– 094** ஏனைய பணியாளரமைப்பு **–** மாநிலச் செலவினங்கள் **–** AC ரயத்துவாரி கிராமப்பணிகள் **–01** சம்பளங்கள்
(கு.தொ.கு **2053 00 094** AC 0100)"

(iii) **நில அளவைப் பணியிடங்கள்**

"**2029–00** நில வருவாய் **– 102** நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் **–** மாநிலச் செலவினங்கள் **–** AF நில அளவை பராமரிப்புப்பணி **– 01** சம்பளங்கள்
(கு.தொ.கு **2029 00 102** AF 0105)"

(iv) **குடிமைப் பொருள் பணியிடங்கள்**

"**3456–00** நுகர்பொருள் வழங்கல் **– 001** நெறிப்படுத்துதலும் நிருவாகமும் **–** மாநிலச் செலவினங்கள் **–** AB மாவட்ட பணியாளரமைப்பு **– 01** சம்பளங்கள்
(கு.தொ.கு **3456 00 001** AB 0108)"

(II) 2053–00 மாவட்ட நிருவாகம் **– 094** ஏனைய பணியாளரமைப்பு **–** மாநிலச் செலவினங்கள் **–** AB வட்டப் பணியாளரமைப்புகள்

(அ) **05 அலுவலகச் செலவுகள் 01 தொலைபேசிக் கட்டணங்கள் ரூ.31,500/–**

தொடரும் செலவினம் ரூ.**25,500/–** மற்றும் தொடராச் செலவினம் ரூ.**6,000/–**
(கு.தொ.கு **2053 00 094** AB 0513)

(ஆ) **05 அலுவலகச் செலவுகள் – 03 மின் கட்டணங்கள் ரூ.1,20,000/–**
(த.தொ.கு 2053 00 094 AB 0531)

(இ) **05 அலுவலகச் செலவுகள் – 05 அறைகலன் ரூ.4,00,000/–**
(த.தொ.கு 2053 00 094 AB 0559)

(ஈ) **19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் ரூ.1,35,000/–**
(த.தொ.கு 2053 00 094 AB 1914)

(உ) **21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ.12,61,446/–**
(த.தொ.கு 2053 00 094 AB 2119)

(ஊ) **45 பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ.1,92,000/–**
(த.தொ.கு 2053 00 094 AB 4500)

(எ) **76 கணினியும் துணைப் பாகங்களும் – 01 வாங்குதல் ரூ.1,00,000/–**
(த.தொ.கு 2053 00 094 AB 7614)

**6.** மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணி குறித்ததாகும் (New Instrument of Services). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவினை நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரை நடப்பாண்டிற்கு தேவைப்படும் சரியான தொகையினை கணக்கிட்டு, எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு செய்ய தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதி விதிகள் 1963–ன் இணைப்பிலுள்ள படிவம் 'அ'–ன்படி இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2018–2019–ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு உரிய வரைவு செயற்குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது.I/வருவாய்) துறைக்கு அனுப்பி வைக்குமாறு முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**7.** இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கைகள் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும். இப்புதிய வட்டம் **06.04.2018–**ஆம் நாள் முதல் செயல்படும்.

**8.** புதிய ஜமுனாமரத்தூர் வட்டம் உருவாக்குவது குறித்து மேலே பத்தி 4–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**9.** இந்த அரசாணை நிதித்துறையின் கோப்பு எண்.**13917**/வருவாய், நாள் **3.4.2018** மற்றும் அ.சா.கு.எண்.**17136**/மை.ம.ஆபி/**2018**, நாள் **3.4.2018–**இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.**01** (ஒன்று).

**ஆளுநரின் ஆணைப்படி**

**இணைப்பு–1**

**அரசாணை (நிலை) எண்.127, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 06–04–2018**
**ஜமுனாமரத்தூர் வருவாய் வட்டத்திற்கு புதியதாக ஒப்பளிக்கப்படும் தற்காலிக பணியிடங்கள்**

| *வ.எண்.* | *பணியிடங்களின் பெயர்* | *ஊதிய விகிதம் (in pay revised scale)* | *பணியிடங்களின் எண்ணிக்கை (இணைப்பு–2 கலம் 14–ன்படி)* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| | **பொதுப்பிரிவு** | | |
| 1 | வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.37,700/– நிலை–20, ரூ.37,700/– ரூ.1,19,500/– | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.36,900/– நிலை–18, ரூ.36,900/– ரூ.1,16,600/– | 1 |
| 3 | வருவாய் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.20,600/– நிலை–10, ரூ.20,600/– ரூ.65,500/– | 2 |
| 4 | தட்டச்சர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/– நிலை –8, ரூ.19,500/– ரூ.62,000/– | 1 |
| 5 | பதிவுறு எழுத்தர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,900/– நிலை–2, ரூ.15,900/– ரூ.50,400/– | 1 |

| வ.எண். | பணியிடங்களின் பெயர் | ஊதிய விகிதம் (in pay revised scale) | பணியிடங்களின் எண்ணிக்கை (இணைப்பு—2 கலம் 14—ன்படி) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 6 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/— நிலை—1, ரூ.15,700/— ரூ.50,000/— | 3 |
| 7 | ஈப்பு ஓட்டுனர் | TEXCO பரிந்துரையின் அடிப்படையில் | 1 |
| 8 | இரவுக்காவலர் | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002—ன்படி | 1 |
| 9 | மசால்சி | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002—ன்படி | 1 |
| | **சமூக பாதுகாப்புத் திட்டம்** | | |
| 10 | தனி வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.37,700/— நிலை—20, ரூ.37,700/— ரூ.1,19,500/— | 1 |
| 11 | தட்டச்சர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/— நிலை —8, ரூ.19,500/— ரூ.62,000/— | 1 |
| 12 | ஈப்பு ஓட்டுனர் | TEXCO பரிந்துரையின் அடிப்படையில் | 1 |
| 13 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/— நிலை—1, ரூ.15,700/— ரூ.50,000/— | 1 |
| 14 | பதிவுரு எழுத்தர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,900/— நிலை—2, ரூ.15,900/— ரூ.50,400/— | 1 |
| | **தேர்தல் பிரிவு** | | |
| 15 | துணை வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.36,900/— நிலை—18, ரூ.36,900/— ரூ.1,16,600/— | 1 |
| | **வட்ட வழங்கல் பிரிவு** | | |
| 16 | வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர் நிலை) | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.36,900/— நிலை—18, ரூ.36,900/— ரூ.1,16,600/— | 1 |
| 17 | உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.20,600/— நிலை—10, ரூ.20,600/— ரூ.65,500/— | 1 |
| 18 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/— நிலை—1, ரூ.15,700/— ரூ.50,000/— | 1 |
| | **நில அளவைப்பிரிவு** | | |
| 19 | மண்டல துணை ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,600/— நிலை—12, ரூ.35,600/— ரூ.1,12,800/— | 1 |
| 20 | வட்ட சார் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,400/— நிலை—11, ரூ.35,400/— ரூ.1,12,400/— | 1 |
| 21 | குறுவட்ட அளவர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.20,600/— நிலை—10, ரூ.20,600/— ரூ.65,500/— | 2 |
| 22 | முதுநிலை வரைவாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,400/— நிலை—11, ரூ.35,400/— ரூ.1,12,400/— | 1 |
| 23 | புல உதவியாளர் | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002—ன்படி | 1 |
| | **கூடுதல்** | | |
| 24 | கிராம நிருவாக அலுவலர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/— நிலை —8, ரூ.19,500/— ரூ.62,000/— | 6 |
| | | **மொத்தம்** | **33** |

## இணைப்பு–2

## புதிதாக உருவாக்கப்படும் திருவண்ணாமலை மாவட்டம் – ஜமுனாமரத்துார் வட்டத்திற்கான பணியிட விவரங்கள்

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம்/ தற்காலிகம் | போளூர் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | செங்கம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | கலசப்பாக்கம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை | | | மிகைப் பணியிடங்கள் | | | ஜமுனாமரத்துார் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள் | ஜமுனாமரத்துார் வட்டத்திற்கு புதியதாக தோற்றுவிக்க வேண்டிய தற்காலிக பணியிடங்கள் | ஜமுனாமரத்துார் வட்டத்திற்கு அனுமதிக்கப் பட வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | போளூர் | செங்கம் | கலசப்பாக்கம் | போளூர் | செங்கம் | கலசப்பாக்கம் | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| | **அ. பொதுப்பிரிவு** | | | | | | | | | | | | | |
| 1 | வட்டாட்சியர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர்கள் | நிரந்தரம் | 2 | 1 | 1 | 2 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 4 | கூடுதல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | தற்காலிகம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 5 | வருவாய் ஆய்வாளர்கள் | நிரந்தரம் | 5 | 5 | 3 | 5 | 5 | 3 | 0 | 0 | 0 | 0 | 2 | 2 |
| 6 | வருவாய் உதவியாளர்கள் * 3 மிகை பணியிடம் | நிரந்தரம்/ தற்காலிகம் | 3 | 4 | 4 | 3 | 3 | 2 | 0 | 1 | 2 | 1 (கலசப்பாக்கம் வட்டம் பொது பிரிவில் இருந்து) | 0 | 1 |
| 7 | இளநிலை உதவியாளர்கள் # 9 மிகை பணியிடம் | நிரந்தரம்/ தற்காலிகம் | 7 | 4 | 3 | 2 | 2 | 1 | 5 | 2 | 2 | 1 (போளூர் வட்டம் பொது பிரிவில் இருந்து | 0 | 1 |
| 8 | தட்டச்சர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| 9 | பதிவுரு எழுத்தர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம்/ தற்காலிகம் | போளூர் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | செங்கம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | கலசப்பாக்கம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை | | | மிகைப் பணியிடங்கள் | | | ஜமுனா மரத்துார் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள் | ஜமுனா மரத்துார் வட்டத்திற்கு புதியதாக தோற்றுவிக்க வேண்டிய தற்காலிக பணியிடங்கள் | ஜமுனாமரத்துார் வட்டத்திற்கு அனுமதிக்கப் பட வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | போளூர் | செங்கம் | கலசப்பாக்கம் | போளூர் | செங்கம் | கலசப்பாக்கம் | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 10 | அலுவலக உதவியாளர் | நிரந்தரம் | 7 | 8 | 4 | 7 | 7 | 4 | 0 | 1 | 0 | 1 | 3 | 4 |
| 11 | ஈப்பு ஓட்டுநர் | தற்காலிகம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| 12 | இரவுக் காவலர் | நிரந்தரம் | 1 | 0 | 1 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| 13 | மசால்சி | தற்காலிகம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| | **மொத்தம்** | | **31** | **28** | **22** | **26** | **24** | **18** | **5** | **4** | **4** | **3** | **12** | **15** |

* 3 வருவாய் உதவியாளர்கள் பணியிடங்கள் மிகைப் பணியிடங்களாக உள்ளன. இதில் ஜமுனாமரத்தூர் பொது, சமூகப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் தேர்தல் பிரிவுகளுக்கு தலா 1 பணியிடம் வீதம் மறுபரவலமர்த்தல் செய்யலாம்.

# 9 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் மிகை பணியிடங்களாக உள்ளன. இவற்றை ஜமுனாமரத்தூர் பொது, சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றிற்கு தலா 1 பணியிடம் வீதமும் வட்ட வழங்கல் பிரிவிற்கு 2 பணியிடங்களும் மறுபரவலமர்த்தல் செய்யலாம். மீதமுள்ள 5 மிகைப் பணியிடங்களை தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யலாம்.

**ஆ. சமூக பாதுகாப்புத் திட்டம்**

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தனி வட்டாட்சியர் | தற்காலிகம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| 2 | வருவாய் உதவியாளர் | தற்காலிகம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 1 (செங்கம் வட்டம் பொது பிரிவின் மிகை பணியிடம் | 0 | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | தற்காலிகம் | 0 | 0 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 1 (போ ளூர் வட்டம் பொது பிரிவின் மிகை பணியிடம் | 0 | 1 |
| 4 | தட்டச்சர் | தற்காலிகம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| 5 | ஈப்பு ஓட்டுநர் | தற்காலிகம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | தற்காலிகம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| 7 | கணினி இயக்குபவர் | தற்காலிகம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 8 | பதிவுரு எழுத்தர் | தற்காலிகம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| | **மொத்தம்** | | **5** | **5** | **6** | **5** | **5** | **6** | **0** | **0** | **0** | **2** | **5** | **7** |

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம்/ தற்காலிகம் | போளூர் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | செங்கம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | கலசப்பாக்கம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை | | | மிகைப் பணியிடங்கள் | | | ஜமுனாமரத்தூர் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள் | ஜமுனாமரத்தூர் வட்டத்திற்கு புதியதாக தோற்றுவிக்க வேண்டிய தற்காலிக பணியிடங்கள் | ஜமுனாமரத்தூர் வட்டத்திற்கு அனுமதிக்கப் பட வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | போளூர் | செங்கம் | கலசப்பாக்கம் | போளூர் | செங்கம் | கலசப்பாக்கம் | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| **இ. தேர்தல் பிரிவு** | | | | | | | | | | | | | | |
| 1 | துணை வட்டாட்சியர் | தற்காலிகம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| 2 | உதவியாளர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 1 (கலசப்பாக்கம் வட்டம் பொது பிரிவில் இருந்து) | 0 | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | தற்காலிகம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 4 | தட்டச்சர் | தற்காலிகம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | **மொத்தம்** | | **2** | **2** | **2** | **2** | **2** | **2** | **0** | **0** | **0** | **1** | **1** | **2** |
| **ஈ. வட்ட வழங்கல் பிரிவு** | | | | | | | | | | | | | | |
| 1 | வட்ட வழங்கல் அலுவலர் (வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர் நிலையில்) | தற்காலிகம் | 1 | 1 | 1 (வட்டாட்சியர் நிலை) | 1 | 1 | 1 (வட்டாட்சியர் நிலை | 0 | 0 | 0 | 0 | 1 (துணை வட்டாட்சியர் நிலை) | 1 |
| 2 | வருவாய் உதவியாளர் | தற்காலிகம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| 3 | தனி வருவாய் ஆய்வாளர் (இநிஉ நிலை) | தற்காலிகம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 1 (செங்கம் வட்டம் பொது பிரிவில் இருந்து) | 0 | 1 |

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம்/ தற்காலிகம் | போளூர் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | செங்கம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | கலசப்பாக்கம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை | | | மிகைப் பணியிடங்கள் | | | ஜமுனாமரத்தூர் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள் | ஜமுனா மரத்தூர் வட்டத்திற்கு புதியதாக தோற்றுவிக்க வேண்டிய **தற்காலிக** பணியிடங்கள் | ஜமுனா மரத்தூர் வட்டத்திற்கு அனுமதிக்கப் பட வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | போளூர் | செங்கம் | கலசப்பாக்கம் | போளூர் | செங்கம் | கலசப்பாக்கம் | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 4 | இளநிலை உதவியாளர் | தற்காலிகம் | 0 | 0 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 1 (கலசப்பாக்கம் வட்டம் பொது பிரிவில் இருந்து) | 0 | 1 |
| 5 | அலுவலக உதவியாளர் | தற்காலிகம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| | **மொத்தம்** | | **4** | **4** | **5** | **4** | **4** | **5** | **0** | **0** | **0** | **2** | **3** | **5** |
| | **கூடுதல் (அ+ஆ+இ+ஈ)** | | **42** | **39** | **35** | **37** | **35** | **31** | **5** | **4** | **4** | **8** | **21** | **29** |
| **உ. நில அளவை பிரிவு** | | | | | | | | | | | | | | |
| 1 | வட்ட துணை ஆய்வாளர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| 2 | வட்ட சார் ஆய்வாளர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| 3 | குறுவட்ட அளவர்கள் | நிரந்தரம் | 5 | 5 | 3 | 5 | 5 | 3 | 0 | 0 | 0 | 0 | 2 | 2 |
| 4 | முதுநிலை வரைவாளர் | தற்காலிகம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| 5 | புல உதவியாளர் | நிரந்தரம் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| | **மொத்தம்(உ)** | | **9** | **9** | **7** | **9** | **9** | **7** | **0** | **0** | **0** | **0** | **6** | **6** |
| | **கூடுதல் (அ முதல் ஈ வரை)** | | **42** | **39** | **35** | **37** | **35** | **31** | **5** | **4** | **4** | **8** | **21** | **29** |
| | **மொத்த கூடுதல் (அ முதல் உ வரை)** | | **51** | **48** | **42** | **46** | **44** | **38** | **5** | **4** | **4** | **8** | **27** | **35** |

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம்/ தற்காலிகம் | போளூர் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | செங்கம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | கலசப்பாக்கம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை | | | மிகைப் பணியிடங்கள் | | | ஜமுனா–மரத்துார் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள் | ஜமுனா–மரத்துார் வட்டத்திற்கு புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | ஜமுனா–மரத்துார் வட்டத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | போளூர் | செங்கம் | கலசப்பாக்கம் | போளூர் | செங்கம் | கலசப்பாக்கம் | | | |
| | **ஊ . கிராம நிர்வாகம்** | | | | | | | | | | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| | **1) கிராம நிர்வாக அலுவலர்கள்** | **நிரந்தரம்** | **57** | **49** | **31** | **54** | **48** | **30** | **3** | **1** | **1** | **5** | **6** | **11** |
| | **2) கிராம உதவியாளர்கள்** | **நிரந்தரம்** | **114** | **121** | **54** | **97** | **107** | **51** | **17** | **14** | **3** | **34** | **0** | **34** |
| | **மொத்தம் (ஊ)** | | **171** | **170** | **85** | **151** | **155** | **81** | **20** | **15** | **4** | **39** | **6** | **45** |
| | **மொத்த கூடுதல் (அ முதல் உ வரை)** | | **51** | **48** | **42** | **46** | **44** | **38** | **5** | **4** | **4** | **8** | **27** | **35** |
| | **கூடுதல் அ முதல் ஊ வரை** | | **222** | **218** | **127** | **197** | **199** | **119** | **25** | **19** | **8** | **47** | **33** | **80** |

## மிகைப் பணியிடங்கள்

| பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|
| இளநிலை உதவியாளர் | 5 |
| **மொத்தம்** | **5** |

## தொகுப்பு
## புதிதாக உருவாக்கப்படும் திருவண்ணாமலை மாவட்டம் – ஜமுனாமரத்துார் வட்டத்திற்கான பணியிட விவரங்கள்

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம்/ தற்காலிகம் | போளூர் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | செங்கம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | கலசப்பாக்கம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை | | | மிகைப் பணியிடங்கள் | | | ஜமுனா–மரத்துார் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள் | ஜமுனா–மரத்துார் வட்டத்திற்கு புதியதாக தோற்றுவிக்க வேண்டிய தற்காலிக பணியிடங்கள் | ஜமுனா–மரத்துார் வட்டத்திற்கு அனுமதிக் கப்பட வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | போளூர் | செங்கம் | கலசப்பாக்கம் | போளூர் | செங்கம் | கலசப்பாக்கம் | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 1 | **அ) பொதுப்பிரிவு** | நிரந்தரம்/ தற்காலிகம் | 31 | 28 | 22 | 26 | 24 | 18 | 5 | 4 | 4 | 3 | 12 | 15 |
| | ஆ) சமூக பாதுகாப்பு திட்டம் | | 5 | 5 | 6 | 5 | 5 | 6 | 0 | 0 | 0 | 2 | 5 | 7 |
| | இ) தேர்தல் | | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 0 | 0 | 0 | 1 | 1 | 2 |
| | ஈ) வட்ட வழங்கல் பிரிவு | | 4 | 4 | 5 | 4 | 4 | 5 | 0 | 0 | 0 | 2 | 3 | 5 |
| | மொத்தம் (அ+ஆ+இ+ஈ) | | 42 | 39 | 35 | 37 | 35 | 31 | 5 | 4 | 4 | 8 | 21 | 29 |
| | உ) நில அளவை பிரிவு | | 9 | 9 | 7 | 9 | 9 | 7 | 0 | 0 | 0 | 0 | 6 | 6 |
| | ஆக மொத்தம் (அ+ஆ+இ+ஈ+உ) | | 51 | 48 | 42 | 46 | 44 | 38 | 5 | 4 | 4 | 8 | 27 | 35 |
| | கிராம நிர்வாகம் | | 171 | 170 | 85 | 151 | 155 | 81 | 20 | 15 | 4 | 39 | 6 | 45 |
| | **ஆக மொத்தம் (அ+ஆ+ இ+ஈ+உ+ஊ)** | | **222** | **218** | **127** | **197** | **199** | **119** | **25** | **19** | **08** | **47** | **33** | **80** |

**அதுல்ய மிஸ்ரா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU